Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

**மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை**

**பாடம்: நடனம் - பரதம்**

**வாரம் - 4**

**தரம்: 11**

**ஆக்கம்: ஆசிரியை S. சானு பிரியதரஷனி**
**கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்**

## பகுதி 1

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1 கோர்வைகளின் இறுதியில் இடம்பெறும் அடவு அல்லாதது
1) கோர்வையடவு 2) முடிவடவு 3) தீர்மானஅடவு 4) மகுடஅடவு

2. சதுர முத்திரைக்குரிய விநியோகம்
1) அழகு 2) நடை 3) பந்து 4) நதி

3. பல்லவி,அனுபல்லவி,சரணம் என்ற பிரிவுகளைக் கொண்ட உருப்படி
1) அலாரிப்பு 2) ஜதிஸ்வரம் 3) சப்தம் 4) வர்ணம்

4. தித்தெய்ந்ததாதெய் அடவிலுள்ள பாதபேதம் அல்லாதது
1) சமபாதம் 2) உத்பிளவனம் 3) பிரமரி 4) பாதசாரிகா

5. மட்டக்களப்பு பிரதேசத்திற்குரிய கூத்து அல்லாதது
1) வடமோடி 2) தென்மோடி 3) காமன்கூத்து 4) மகிடிக்கூத்து

6. கூத்துவடிவமைப்பில் அரங்கேற்றத்திற்கு முந்தியநிலை
1) ஊருக்குச்செல்லல் 2) சதங்கைஅணிதல் 3) சட்டம்கொடுத்தல் 4) அடுக்குப்பார்த்தல்

7. அலாரிப்பில் “திருகுடுதக”எனும் சொற்கட்டு இடம்பெறுவது
1) 6 முறை 2) 9 முறை 3) 12 முறை 4) 16 முறை

8. மைத்துனரைக் காட்ட பயன்படுத்தும் முத்திரைகளில் ஒன்று
1) கடகாமுகம் 2) மயூரம் 3) பதாகம் 4) கர்த்தரீமுகம்

9. மூவடிமண் கேட்டு நின்ற அவதாரம்
1) வாமணன் 2) நரசிம்மன் 3) பரசுராமன் 4) பலராமன்

10. சங்கமருவியகாலஆடல் பற்றிக் கூறும் இலக்கியங்கள்
1) இராமயணம் 2) எட்டுத்தொகை 3) சிலப்பதிகாரம் 4) பத்துப்பாட்டு

## பகுதி 2

**1.சுருக்கமான விடை தருக.**

1.பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு முறையில் அபிநயத்தை முதலில் வெளிப்படுத்தும் உருப்படி எது?

2.இவ்வுருப்படியின் இலட்சணத்தை எழுதுக.

3.இவ்வுருப்படியின் இராகம் ,தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக.

**2) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

1.ஏந்தல் நடனம் 2.நவரஸம் 3.நாட்டுக் கூத்து